WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-28

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

03-06-2026

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-28, 03-06-2026

தொல்:சொல்: இடையியல் -7 (தொடர்)

1 அடுத்து, 'ஏ' கார இடைநிலை பற்றி உரைக்கிறார்.

"தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை யிவ்வைந் தேகாரம்மே" - (257)

இ-ள்:

தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என ஏகாரம் ஐந்தாம் எ-று

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-28 03-06-2026

தொல்:சொல்: இடையியல் -7 (தொடர்)

எ-டு:

உண்டே மறுமை -- தேற்ற ஏகாரம், தெளிவெனினும் ஒக்கும்.

நீயே சொன்னாய் -- வினா ஏகாரம்

அவர்களுள் இவளே அழகி -- பிரிநிலை ஏகாரம்

நிலமே நீரே தீயே வளியே வெளியே -- எண் ஏகாரம்

புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே -- ஈற்றசை ஏகாரம்

(திருமந்திரப் பாடல்கள், வெண்பாக்கள், அச்சோ பதிகம் 'ஏ' காரத்தில் நிறைவுறும்)

எ-டு:

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனையாட் கொண்டபோதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்? நானே இதற்கு நாயகமே?

(குழைத்தபத்து)

(அன்றே, குன்றே, போதே என்பன தேற்ற ஏகாரம்.
எம்மானே, நாயகமே = ஈற்றசை ஏகாரம்(னே=ன்+ஏ)
கொண்டிலையோ -- வினா ஓகாரம் (யோ=ய்+ஓ)
எனக்குண்டோ -- எதிர்மறை ஓகாரம் (டோ=ட்+ஓ)

"நீயோ பிழை செய்வாய்?" என வருவித்துப் பொருள் கொள்க.
இது எதிர்மறை ஏகாரம். ?
2 இனி 'மற்று' என்ற இடைச் சொல்.
"மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பா லிரண்டென மொழிமனார் புலவர்" (262)
இ-ள்: 'மற்று' எனும் இடைச் சொல், வினை மாற்றும், அசை நிலையுமென இரண்டாம் எ-று

எ-டு:"மற்று நீ வன்மை பேசி வன்றொன்டன் எனும் நாமம்..(சேக்கிழார்)
"மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்..."(சுந்தரர்)

3 இனி 'அம்ம' எனும் இடைச் சொல். இன்று வியப்பு, விளி போன்ற பொருளில் வந்த போதும், ஒன்றைக் கூறி 'அதனைக் கேள்' எனச் சொல்லும் பொருளில் வரும் என்கிறார் தொல்காப்பியனார்.

"அம்ம கேட்பிக்கும்" (276)

இ-ள்:
'அம்ம' எனும் இடைச் சொல், ஒருவனை ஒருவன் ஒன்று கேள் என்று சொல்லுதற்கண் வரும் எ-று

இவ்விடைச் சொல்லை மணிவாசகர் தனது கோயில் திருப் பதிகத்திலே வைத்துப் பாடியருளுகிறார்:

புற்றில் **வாள்** அரவும் அஞ்சேன்; பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்;
கற்றை வார் சடை எம் அண்ணல், கண் நுதல், பாதம் நண்ணி,
மற்றும் ஓர் தெய்வம் தன்னை உண்டு என நினைந்து, எம் பெம்மாற்கு
அற்றிலாதவரைக் கண்டால், அம்ம! நாம் அஞ்சுமாறே!

என முடிக்கிறார். இப் பதிகத்திலே 'அம்ம' நாம் அஞ்சுமாறே' என்று இடைச் சொல்லை 10 தடவைகள் எடுத்தாண் டுள்ளார்.

(வாழ், வாள் -- இரு பாவனை)

-- இடையியல் நிறைவு -

4 அடுத்து 'உரியியலை' ஆரம்பம் செய்கிறேன்.

உரிச் சொற்கள் ஆவன செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டன. செய்யுளில் இசை, குறிப்பு, பண்பு எனும் பொருளை உணர்த்துவதற்கு இவையே உரிமை கொண்டன என்பதனாலேயே 'உரிச் சொல்' எனப் பெயர் பெற்றது.

இவ்வுரிச் சொற்கள் மூன்று வகைகள் எனப் பாகுபாடுகளைக் கொண்டன.

1 ஒரு பொருள் உணர்த்தும் ஒரு சொல்
2 பல பொருள் உணர்த்தும் ஒரு சொல்
3 ஒரு பொருள் உணர்த்தும் பல சொல்

இவ்வுரிச் சொற்கள் இடைச் சொற்களை ஒருவாறு ஒத்து, தமக்குரிய இயல்போடு, தாம் சார்ந்த பெயரையும் வினையையும் அடியாகக் கொண்டு வெவ்வேறு பொருளை உணர்த்தி நிற்கும் என உரையாசிரியர் உரைப்பர்.

- இவ்வகுப்பு நிறைவு -

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-28 03-06-2026

தொல்:சொல்: இடையியல் -7 (தொடர்)

ஐயம் தெளிதல்